# நம்பிக்கை நாயகன்!





**ஜெ.ஜெயரஞ்சன்**
**செயல் துணைத் தலைவர்**
**மாநில திட்டக் குழு**
**தமிழ்நாடு அரசு**

மக்களாட்சியில் ஆள்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைக்கும் அந்தத் தலைமையை தேர்ந்தெடுக்கும் மக்களுக்கும் ஒரு சமூக ஒப்பந்தம் (Social Contract) ஏற்படுகிறது. இது ஒரு எழுதப்படாத ஒப்பந்தமாகும். தேர்ந்தெடுக்கும் மக்கள் தங்களுக்கான முடிவுகளை எடுக்கும் உரிமையை தலைமைக்கு வழங்கு கின்றனர். எந்த நம்பிக்கையில் அந்த உரிமையை வழங்குகின்றனர்? தேந்தெடுக்கப்படும் தலைமை தங்களது (மக்களது) வாழ்வின் தரம் உயரவும் செழிக்கவும் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே அந்த உரிமைகளை வழங்குகின்றனர். மக்களாட்சியின் மகத்தான முழக்கங்களான குடியுரிமை (Liberty), சமத்துவம் (equality), சகோதரத்துவம் (fraternity) ஆகியவற்றை செயலில் காணலாம் என்ற நம்பிக்கையில்தான் இந்த ஒப்பந்தம் ஏற்படுகிறது.

**இந்தச் சமுதாய ஒப்பந்தத்தின்படி தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மக்கள் அவர் மீது வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றி எங்ஙனம் தனது வெற்றிப் பயணத்தை தொடர்கிறார் என்பதை அவர் செயல்படுத்திய ஒரு திட்டத்தின் ஊடாக நாம் சீர்தூக்கி காண்போம்.**

நமது சமுதாயத்தில் பெரும் சமூக பொருளாதார மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. இதன் காரணமாக, மக்களின் வாழ்க்கை முறையும் பெரும் மாற்றத்தை கண்டு வருகிறது. உணவுப் பழக்கத்திலிருந்து, உடை உடுத்துவது, பயணிப்பது, உடலுழைப்பு என பன்முக மாற்றங்கள். இந்த மாற்றங்களின் நன்மை, தீமை குறித்து நாம் இங்கு எடை போடப்போவதில்லை. மாறாக, இந்த மாற்றங்கள் மனித வாழ்வில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்று நோக்கினால் ஒன்று புலனாகிறது. மக்களின் நல்வாழ்வுக்காக நாளும் உழைத்து வாழும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் கண்டுள்ளது என்னவெனில் மனிதகுலம் எதிர்கொள்ளும் நோய்களின் தன்மை வெகுவாக மாறிவருகிறது என்பதுதான்.

இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் உடல்நலம் குன்ற பெரும் காரணமாக இருந்தவை தொற்றுநோய்களே. இவை மனிதனுக்கும் மனிதனைச் சுற்றி வாழும் கோடிக்கணக்கான நுண்ணுயிர்களுக்கும் இடையேயான உயிர் போட்டியினால் விளைபவை. தொற்றினால் உடல்நலம் கெடுவதும் இறப்பு நிகழ்வதும் வாடிக்கையாக இருந்தது. சுகாதாரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், அறிவியலின் பெருவளர்ச்சியினால் உருவாக்கப்பட்ட தடுப்பு மருந்துகள், ஆன்டி-பயோடிக் மருந்து வகைகள் ஆகியவற்றால் தொற்று நோய்களி லிருந்து மக்களை காப்பது எளிதாகி இருக்கிறது. இதனால் தொற்றுநோயினால் ஏற்படும் இழப்புகள் குறைந்துவிட்டன.

ஆனால் இறப்பு வேறு வடிவத்தில் வந்துள்ளது. அவைதான் தொற்றா நோய்கள். இவை ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவருக்கு தொற்றாது. இரத்தக்கொதிப்பு, நீரழிவு, புற்றுநோய் போன்றவை தொற்றா நோய்களாகும். மருத்துவ அறிவியல் புள்ளி விவரங்கள் ஆய்வு செய்யும் மருத்துவ அறிக்கைகள் இந்தியாவில் நோய்வாய்ப்படும் நோயாளிகளில் மூவரில் இருவர் தொற்றா நோயினால் பாதிக்கப்படுகின்றனர் என்பதை கண்டறிந்துள்ளனர். தமிழ்நாடு இதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா. அதுவும் பொருளாதார, சமூகக் கட்டமைப்பில் பெரும் மாற்றங்களைக் கண்ட தமிழ்நாட்டில் இந்த மாற்றம் ஏற்படுவதும் இயல்புதான். அதனை எவ்வாறு எதிர்கொள்வது?

இந்த நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைக்கு வரும் சூழலில் அவர்களுக்கான சிகிச்சை அளிப்பது ஒரு முறை. ஆனால் தொற்றும் நோய்களுக்கும் தொற்றா நோய்களுக்கும் உள்ள குறிப்பிட்ட வேறுபாடு என்னவெனில், தொற்றா நோய்கள் தங்கள் இருப்பை வெளிக்காட்டிக் கொள்ள வெகு நாட்கள் ஆகும். அவை அமைதியாக இருந்தே கொல்லும் ஆற்றல் பெற்றவை. அப்படி என்றால் எப்படி இந்த நோய்களிலிருந்து மக்களைக் காப்பது?

**இன்று பிறந்தநாள் காணும் முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றதும் 05.08.2021 அன்று "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற திட்டத்தை துவக்கினார். இத்திட்டத்தின்படி மக்கள் மருத்துவமனையை நாடி வந்து பயன்பெறுவதற்கு பதிலாக மருத்துவம் இல்லத்தைத் தேடி செல்லும் அதிசயம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.** தமிழ்நாட்டிலுள்ள முப்பது வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலரையும் அவர்களது இல்லத்திற்கு சென்று ரத்தக்கொதிப்பு, நீரிழிவு ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படு கின்றன. புற்றுநோய் அறிகுறிகளுக்கான கேள்விகளும் கேட்கப்படுகின்றன. மாதிரிகள் சோதனை சாலையில் பரிசோதிக்கப்பட்டு நோய்த்தாக்கம் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்டவர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு மருத்துவர்கள் மேலும் பரிசோதித்து உரிய சிகிச்சைக்கான மருந்துகளை வழங்குகிறார்கள்.

இதன் பின்னர், அடுத்த மாதத்திற்கான மருந்துகள் நோயாளியின் இல்லத்திற்குச் சென்றடையும். இரு மாதங்களுக்குப் பிறகு மீண்டும் பரிசோதனை. மீண்டும் மருத்துவம். **2021 ஆம் ஆண்டு துவங்கிய இத்திட்டத்தினால் இதுவரை ஏறத்தாழ 4 கோடி பேரை பரிசோதனை செய்து முடித்துள்ளார்கள். அதில் 2.25 கோடி பேருக்கு ஏதோ ஒரு தொற்றா நோய் இருப்பது தெரியவந்துள்ளது. மக்களைத்தேடி மருத்துவ திட்டத்தால் மட்டுமே கண்டறியப்பட்ட தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 52 லட்சம் பேர்.** இப்படியான மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டத்தை நமது முதலமைச்சர் செயல்படுத்தாமல் போயிருந்தால், இந்த 52 லட்சம் பேருக்கும் தொற்றா நோயின் பாதிப்பு தெரியாமலேயே வாழ்ந்திருப்பார்கள். உரிய சிகிச்சையின்றி பின்னர் பெரும் பாதிப்புகளுக்கு ஆளாகியிருப்பார்கள்.

**இவர்களது நோயினை கண்டறிந்து அவர்களுக்கு உரிய சிகிச்சையை அரசின் செலவிலேயே செய்து கொடுப்பது என்பதுதானே மக்கள் அவர்மீது வைத்த நம்பிக்கையை காப்பாற்றுவது. அதை வெற்றிகரமாக காப்பாற்றியுள்ள நமது முதலமைச்சர் அவர்களுக்கு, நம்பிக்கை நாயகனுக்கு, நம்மக்களின் சார்பில் பிறந்த நாள் வாழ்த்துகளை தெரிவித்து மகிழ்கிறேன்.** ●

# காலை உணவு வழங்கி பசிப் பிணியைப் போக்கிய தாயுமானவர்!



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதில் இருந்து மக்களுக்கு, நாட்டுக்கு, தமிழ் மொழிக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டி இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் விளங்கிடும் வகையில் பிற மாநிலத்தவர் பொறாமை கொள்ளும் வகையில் ஆட்சி நடத்தி வருகிறார்.

முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்று என்றால் அதுதான் ஒன்று முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டமாகும். கிராமப்புறங்களில் பெற்றோர் வேலைக்குச் செல்லும்போது தங்களின் பிள்ளைகளுக்கு காலை உணவு வழங்காமல் அனுப்பிவிடுவர்.

பள்ளிக்கு வரும் சிறுவர்கள் பசி மயக்கத்தில் பாடத்தினை கவனிக்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதுடன் அவர்களின் சிந்தனையும் மூழ்கக்கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

அவர்களை பசிப்பிணியில் இருந்து மீட்டால்தான் அவர்களின் கல்வித் தரம் உயரும், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும், அதனால் தமிழ்நாடு உயரும், தமிழ்நாட்டின் உயர்வால் இந்திய நாடே உயரக்கூடிய நிலை ஏற்படும் என்ற எண்ணத்தில் அச்சிறார்களின் பசிப்பிணியைப் போக்கிடவே பள்ளிகளில் 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' வித்தாக உருமாறிற்று!

அதன்படி **15.9.2022ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் நெல்பேட்டையில் உள்ள அரசுப் பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.** மாணவர்களின் - சிறார்களின் பசிப் பிணியைப் போக்கிய இந்த காலை உணவுத் திட்டம் வெளி மாநிலங்களிலும் இன்றைக்கு தொடங்கப்பட்டு வருகின்றது.

வெளி மாநிலங்களுக்குச் சென்ற இந்த காலை உணவுத்திட்டம், கடல் கடந்தும் வெளி நாடுகளுக்குச் செல்லக்கூடிய நிலை இன்றைக்கு உருவாகி இருக்கிறது என்றால் இத்திட்டத்தின் சிறப்பே இதற்குக் காரணம்.

'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்; கனடா நாட்டில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது.

இப்போது இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திட்டமானது இங்கிலாந்து நாட்டிலும் தொடங்கப்பட இருக்கிறது.

இந்நிலையில், **தமிழ்நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை இங்கிலாந்து அரசும் செயல்படுத்த உள்ளது. வருகின்ற ஏப்ரல் மாதம் முதல் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என இங்கிலாந்து அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக 750 பள்ளிகளில் காலை சிற்றுண்டித் திட்டம் செயல் படுத்தப்பட உள்ளதாக அந்நாட்டின் பெண்கள் மற்றும் சமத்துவத்திற்கான அமைச்சர் பிரிட் ஜெட் பிலிப்சென் தெரிவித்துள்ளார்.**

காலையில் பள்ளிக் குழந்தைகளுக்கு கோதுமை கஞ்சி, பழங்கள், தயிர் என ஆரோக்கியமான சத்தான காலை உணவுகள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தால் 18 லட்சம் குழந்தைகள் பயனடைவர்கள் என்று இங்கிலாந்து அமைச்சர் கூறியுள்ளார்.

காலை சிற்றுண்டித் திட்டம் மூலம், மாணவர்களின் கற்றல் திறன் மேம்படும் என்றும், பல்வேறு போட்டிகளில் அவர்களும் திறம்படக் கலந்துகொள்ள முடியும் என்றும் இங்கிலாந்து அமைச்சர் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ●